ஏழாம்நரகுக் கிரைகாண்நிராமயமே (௨௫௫)
நடனக்காரென்றே யெதிர்பேசுமட்டியுடல்
நீடுழிகால நிலையோநிராமயமே (௨௫௬)
பாகாய்க்கசிந்துருகும் பரமபதத்தினர்க்குத்
தேகாபிமானமெல்லாந் தீயுநிராமயமே (௨௫௭)
ஆவியுடல்பொருளு மடங்கக்கொள்ளைகொண்டுமெனைப்
பாவியென் றுதள்ளப்படுமோநிராமயமே (௨௫௮)
அளந்தாலுயிர்த்துவல கவ்வளவுமெவ்வளவும்
உளந்தெளியாருக்கருடா னுண்டோநிராமயமே (௨௫௯)
சொன்னபடிக்கிணங்கா துட்டன்யானுகினுமுன்
வன்னமலர்ப்பதத்தை வைப்பாய்நிராமயமே (௨௬௦)
பாதமுடியின்பரமார்த்தமானவுனக்
கேதுவடிவென்றே பிசைப்போநிராமயமே (௨௬௧)
ஈன்றுளிருந்த முறைபோலுமீழ்த்திகாய்
எந்நாள்வருவதெனக் கெந்தாய்நிராமயமே (௨௬௨)

படக்கெடுத்துவீசி மனத்துடித்தநீரதனால்
கடந்குறைபுஞ்சீடோவென் கண்மணிநிராமயமே (௨௬௩)
தானேதானென்வ்வுயிர்க்குந் தற்பரமாய்த்திட்டுடல்
உணுகிக்கொண்ட் வுளவேனிராமயமே (௨௬௪)
பாசமொழிந்துநெறி பற்றினின்றவித்தகர்க்கு
வீசித்திருக்கருணை வீசும்னிராமயமே (௨௬௫)
கற்றகல்வியற்று கன்மமுதல்பாசமற்று
உத்தமர்க்குச்சித்த மொடுங்குனிராமயமே (௨௬௬)
சித்தனிரஞ்சனத்திற் சென்றிருக்கவல்லார்க்குப்
புத்தினிருவிகற்பம் பூணும்நிராமயமே (௨௬௭)
நீட்டிக்குறுக்க நெடும்பகையென்பாரதுபோற்
காட்டிமறைக்கக் கணக்கோனிராமயமே (௨௬௮)
கர்ப்பூரவுண்டை கரைவதுபோலக்கரையுந்
தற்போதக்கருணை தந்தாணிராமயமே (௨௬௯)
தேனோடுபாகாய் திரண்டமுதமென்னவுமென்
ஊனோடுமேலா டுறைந்தாய்நிராமயமே (௨௭௰)
கண்டித்தவெள்ளுங் கரும்பும்போலுமெனது
சண்டித்தமெய்யதற்குச் சார்நீனிராமயமே (௨௭௧)
ஐந்துபுலவேடருக்கே யாளாக்கிஞனெக்கு
வந்தபலனென்ன வமூத்தாய்னிராமயமே (௨௭௨)
ஓயாக்கவலைக் குரித்தாம்புழுக்குரம்பை
ஆயெனவகுத்த தையானிராமயமே (௨௭௩)
ஐவர்க்குமென்னை யடங்கச்சிறையாக்குவது
உய்புங்கருணைக் குளதோனிராமயமே (௨௭௪)
ஊசிதனைக்காந்த முகந்தனைக்குமாறெனவே
பாசத்தைப்போக்கியருள் பாராய்னிராமயமே (௨௭௫)
உள்ளந்தெளிந்தே வொளியாய்நிறைந்தினர்க்குக்
கள்ளந்தெளியக்கனவு கண்டேனிராமயமே (௨௭௬)
அற்புதமேநிர்க்குணமே யன்பர்க்கருள்புரியுஞ்
சற்குருவே[illegible]கள் சலுவேனிராமயமே (௨௭௭)
அழியாவருள்வாழி யள்ளியடியேன்றனக்கா
மழையாய்ப்பொழிந்தானீ வாழினிராமயமே (௨௭௮)
மூத்தோர்க்குவாழியெங்கள் முன்னோர்க்கும்வாழியருள்
வித்தகர்க்குவாழியெங்கும் விளங்காய்னிராமயமே (௨௭௯)
ஒழியாவருள்வாழி யுத்தமர்களும்வாழி
அழியாப்பதிவாழி யையானிராமயமே (௨௮௰)

குன்றக்குணங்குடிகொண் டோராமெய்வித்தகரும்
எந்நாளும்வாழியரு ளைந்தாய்நிராமயமே (௨௪௧)

நிராமயக்கண்ணி-முற்றிற்று-ஆகபாடல்-௨௪௫.

பராபரக்கண்ணி.

அண்டபுவனமென்று மாடுதிருக்கூத்தினையான்
கண்டுமகிழ்ந்திடவே காட்டாய்பராபரமே (௧)
ஆதியாயாண்டவனா யகனாகவாகித்துவாய்ச்
சோதியாய்நின்மலமாய்ச் சூழ்ந்தாய்பராபரமே (௨)
வேதமறைப்பொருளே வேதாந்தத்துட்கருவை
ஓதியுனையறிந்தோ ருண்டோபராபரமே (௩)
அண்டம்புவனமுட னாகாசமென்றுகும்பிக்
கொண்டாமெய்ஞ்ஞானக் கூத்தேபராபரமே (௪)
நாவாரிபுகழ்க்கெட்டா நாயகனேநாதாந்தப்
பூவாய்மலர்ந்திருக்கப் பூத்தாய்பராபரமே (௫)
போரம்பெரிய பெரும்பொருளேபேதைதனக்
காராரிருந்தும்பல னேமோபராபரமே (௬)
மாராயநற்கருணை மாவருட்சித்தித்திடவே
பாராயோவையா பகராய்பராபரமே (௭)
ஆனாலுமுன்பாதம் யாசித்திருப்பதற்குத்
தானுயிரங்கியரு ளாராய்பராபரமே. (௮)
நாதாந்தமூல நடுவீட்டுக்குள்ளிருக்கு
மாதவத்தோர்க்கான மருவேபராபரமே (௯)
உடலுக்குயிராயென் னுள்ளமேயுன்பதத்தைக்
கடலுமலையுந்திரிந்துங் காணேன்பராபரமே (௰)
மாத்திரத்துக்கெட்டா மறைப்பொருளேமன்னுயிரோ
சேர்ந்தவெழுதோற்றத்தின் சித்தேபராபரமே (௰௧)
தினியேயனுக்காதரவு தாரணியிலில்லாமல்
அனியாயமாவதனைக் கழகோபராபரமே (௰௨)
ஓடித்திரிந்தலைந்து முன்பாதங்காணாமல்
வாடிக்கலங்குகிறே னு வாராய்பராபரமே (௰௩)
ஆராதிதாரந் தொலைத்துமதினுன்பாதம்
பாராதவத்தாழ்பயந்தேன்பராபரமே (௰௪)

தேடக்கிடையாத திரவியமே தேன்கடலே
ஈடெனக்குழைந்தோ விறையேபராபரமே (௧௫)
அரியபெரும்பொருளே யன்பாயொருவார்த்தை
பரிபூரணமாய்ப் பகராய்ப்பராபரமே (௧௬)
ஐயோவெனக்குதவு மாதாவைவிட்டுவிட்டுத்
தையலரைத்தேடித் தவித்தேன்பராபரமே (௧௭)
எத்திசையுநோக்கி விசையாதிருக்கத்தாய்
வித்தைவிளையாட்டு விளைப்பாய்பராபரமே (௧௮)
எப்பொழுதுமுன்பதத்தி லென்கருத்தேயெய்துதலுக்
கிப்பொழுதே கைப்பிடித்தா ளிறையேபராபரமே (௧௯)
வாதிக்கடாரவரும் வம்பரைப்போற்றேஷிமனம்
ஏதுக்கடர்வதியா னெளியேன்பராபரமே (௨௰)
கண்ணேமனமேயென்மணியே கண்பார்வைக்கெட்டாத
விண்ணாடங்காவெட்ட வெளியேபராபரமே (௨௧)
அடக்கவரிதாமாயி லைம்பொறியைக்கட்டிப்
படிக்கப்படிப்பெனக்குப் பகராய்ப்பராபரமே (௨௨)
எத்தவங்கள் செய்தாலு மின்பமுடனுன்பதத்தை
முற்றுமொருபோது முற்றார்பராபரமே (௨௩)
சொல்லுக்கிணங்காத சூத்திரத்தைப்பார்த்திருக்க
அல்லும்பகலுமென் காசைபராபரமே (௨௪)
நாற்றச்சடலமதை நம்பார்முகத்திருக்கப்
பூத்துமலர்ந்திருக்கும் பூவேபராபரமே (௨௫)
சோற்றுப்பொதியைச் சுமந்துதிரிந்தலைந்தே
ஆற்றுமனின்றுகளைத் தழுதேன்பராபரமே (௨௬)
காற்றுத்துருத்திதனைக் கல்லாயணைந்திருக்கச்
சூத்திரமாய்நின்றாய் சுழியேபராபரமே (௨௭)
கோலத்திருவடிவு கோதையர்களாசையினால்
ஆலைக்கரும்புபோ லானேன்பராபரமே (௨௮)
கேளாயோவென்கவலை கேட்டிரங்கியடிமைதனை
ஆளாயோவையர்பா லானேன்பராபரமே (௨௯)
எத்தனைதா னகுற்ற மெதிர்த்தடிமைசெய்தாலும்
அத்தனையும் பொறுப்ப தழகேபராபரமே (௩௰)
அல்லலவினையா லறிவுகெட்டவான்மாவாய்
எல்லாம்பதருமென நின்றேன்பராபரமே (௩௧)
சொல்லரியஞானச் சுடரேயொருவார்த்தைச்
செல்வம்பொழிந்திடவே செப்பாய்பராபரமே (௩௨)

நித்தமுனைத்தொழ நிர்மூடனாயிருக்கும்
பித்தனாயேன்காண் பிறந்தேன்பராபரமே (௫௩)
உற்றார்களாலு முறவின்முறையோராலும்
பெற்றார்களாலுமுனைப் பிரிந்தேன்பராபரமே (௫௪)
ஏழைமுகம்பார்த் தெளியேனையெப்பொழுதும்
ஆழாமலாண்டருளென் னழைக்கேபராபரமே (௫௫)
பாவவுடலெடுத்துப் பாதகனாயான்பிறந்துன்
ஆவிகெடுவதுனக் கழகோபராபரமே (௫௬)
வாராயோவென்னிடத்தில் வந்தொருக்காலெந்தன்முகம்
பாராயோசற்றே பகராய்பராபரமே (௫௭)
பார்க்கப்பலவிதமாய்ப் பல்லுயிருக்குள்ளிருந்தும்
ஆர்க்குந்தெரியாம லானாய்ப்பராபரமே (௫௮)
ஆனாலும்பொல்லா தரும்பாவியாகவுடல்
ஏனோவெடுத்தேனோ னெந்தாய்பராபரமே (௫௯)
கர்ப்பூரதீபக் கனலொளிபோற்காட்சிதர
முப்பாழும்பாழாய் முடித்தாள்பராபரமே (௬௰)
கரும்பேநவரசமே கடல்முத்தகண்மணிக்குள்
அரும்பொருளாய்நின்ன வழகேபராபரமே (௬௧)
ஏழையடியேனை யெப்படியுங்கைப்பிடித்து
ஆளாதிருப்பதுனக் கழகோபராபரமே (௬௨)
ஆளாயோவையா வடியேன்பிதற்றுதலைக்
கேளாயோவென்றன் கெஞ்சியேபராபரமே (௬௩)
ஊனுடலுள்ளுயிரி லொட்டாதவக்கருவாய்த்
தானாகிநின்றதனுவேபராபரமே (௬௪)
பொன்னாண்மயக்கெடுத்துப் புத்திகெட்டுநானனவே
பன்னானாநின்றாற் பலனோபராபரமே (௬௫)
இல்லல்லாகூவென் றெனைமறந்துகொண்டேனையே
சொல்லவருமெய்ஞ்ஞானச் சுடரோபராபரமே (௬௬)
ஐயோவடிமைத்தனக் காரிருந்துமென்னபலன்
கையாற்சவிர்த்தனைக்கக் காணேன்பராபரமே (௬௭)
ஆனாலுமேழை யடியேனுக்காதரவாய்த்
தானாயிரங்கியரு ளாய்பராபரமே (௬௮)
தூங்கியிருந்து தொழுவோர்முகம்பார்க்கும்
வேங்கைப்புலியார்க்கு விட்பாய்பராபரமே (௬௯)
கண்மேலைகருத்தேயென் கண்மணியே சின்னிறைந்த
விண்ணடங்காவெட்டவெளியேபராபரமே (௭௰)

காசாசைகொண்டு கலங்கியேகெட்டலைந்த
தோஷியாய்நின்றேன் துணையேபராபரமே (௫௧)

ஐயோவெனத்துய ராரிடத்திற்சொல்லிநின்று
கையெடுக்கப்போறேனென் கண்ணேபராபரமே (௫௨)

என்னதான்செய்திடுவே னென்விதியைச்சொல்லியழ
வுன்னையன்றிவேறெனக்கு முண்டோபராபரமே (௫௩)

முக்கண்விழியொளியே முத்திதருமுத்தமனே
அக்கண்டிறந்தோர்க் கறிவேபராபரமே (௫௪)

முப்பாழும்பாழாகி முத்திபெற்றிருக்கவெனைக்
கைப்பிடிப்பதெப்போதென் கண்ணேபராபரமே (௫௫)

உல்லாசமாக வொளிவுபார்த்திடவுன்
செல்வம்பொழிந்திடவே செப்பாய்பராபரமே (௫௬)

மாச்சரியஞ்செய்யு மதமொடுங்கிமுத்திபெறக்
காட்சிதருவதெப்போ கண்ணேபராபரமே (௫௭)

சண்டாளனென்றென்னைச் சகலருமாயிட்டாலுங்
கொண்டணைப்பதுன்பாரங் குருவேபராபரமே (௫௮)

முத்திதருமெய்ஞ்ஞான முச்சுடரைக்காணாமற்
செத்திறந்துபோனாலென் செய்வேன்பராபரமே (௫௯)

தன்னையறிந்துணரத் தையாவொருவார்த்தை
இன்னபடியென்றே யியம்பாய்பராபரமே (௬௰)

தளியேகண்டுன்னுடைய கைப்பிடிப்போமென்றுசற்றே
எளியேன்முகம்பார்த் திரங்காய்பராபரமே (௬௧)

பாசவினைபோக்கிப் பலவினையைப்போக்கி
ஆசைவைப்போர்தங்களருளேபராபரமே (௬௨)

ஆளவருவோமென் றன்பாயொருவார்த்தை
ஏழைமுகம்பார்த் தியம்பாய்பராபரமே (௬௩)

நிலைகாட்டுங்காய நிசமென்றுநிச்சயித்து
புலையாட்டனென்றுதள்ளப் போமோபராபரமே (௬௪)

பார்க்கப்பலவிதமாய்ப் பல்சமையலாகவொரு
வாக்கைவெளிப்படுத்தி வைப்பாய்பராபரமே (௬௫)

ஆறுசெல்விமேனுங் காதலேயில்லாமல்
போனாலென்னகழகோ புகலாய்பராபரமே (௬௬)

நீச்சாய்ப்பெருகிவா ரிம்புமானந்தவெள்ளம்
பாய்ச்சாயோவையா பகராய்பராபரமே (௬௭)

எத்தனைபோகெஞ்சு மெளியேன்றனக்குதவி
உற்றருணைத்தவிர வுண்டோபராபரமே (௬௮)

கன்னமிடுங்கருவி கரணமனைதச்சுட்டோர்கள்
தன்னுக்குட்டானாய் தனுவேபராபரமே (௬௯)

காயாமற்காய்த்துக் கனித்துசொரிவதற்கு
மாயமாய்ப்பூத்த மலரோபராபரமே (௭௰)

உயிருக்குயிரான வுட்கருவுக்குள்ளமைவே
தயைபாவெனக்குதவி தந்தால்பராபரமே (௭௧)

அறிவையறிவோருக் கானந்தவெள்ளமதாய்
கறையறவேபொங்குங் கடலேபராபரமே (௭௨)

மறைப்பொருளைக்காணா மடையனிவனென்றியம்பிச்
சிரிப்பார்சிரிக்கிலென்ன செய்வேன்பராபரமே (௭௩)

குறிவிளக்குகுருவடியைக் கொள்கையுடன்போற்றுமல்
அறிவுமயங்குகின்றே னையாபராபரமே (௭௪)

வல்லானைக்கெஞ்சி வலியானைக்கால்பிடித்து
இல்லானைநம்பியிருந் திடைந்தேன்பராபரமே (௭௫)

சொல்லும்பதர்நூற்றிச் சூத்திரத்தைப்பாராமற்
கல்லும்நெல்லும்போலக் கலந்தேன்பராபரமே (௭௬)

ஜெகமுழுதுஞ்சுற்றியுமுன் சீர்பாதங்காணாமற்
திகைத்தழுந்தேனியுந் தெளிவாய்பராபரமே (௭௭)

கள்ளக்கருத்துகளைக் கட்டோடறுத்தவருக்
குள்ளிருக்குமெய்ஞ்ஞான வொளியேபராபரமே (௭௮)

கும்பிக்கிரைவிரும்பிக் கொடுப்பார்தமைத்தேடிச்
சிம்பித்திருந்தே சலித்தேன்பராபரமே (௭௯)

காணாதவாசை கடித்தாலென்காண்முசமும்
வீங்காதோவையா விதியேபராபரமே (௮௰)

தூங்காமற்றூங்கி தொழுதிருக்கவென்னுடைய
ஆங்காரமெல்லாமகற்றாய்பராபரமே (௮௧)

தேனமிர்தமூறத் திவ்யமதுரஞ்சொரியத்
தானாயொருவார்த்தை தாராய்பராபரமே (௮௨)

சாத்திரங்களோதுஞ் சதுர்மறையோர்க்கெட்டாத
சூத்திரமாய்நின்ற சதிரேபராபரமே (௮௩)

வேற்றொருவர்காணாத வேதாந்தத்துட்பொருளைப்
பார்த்தோர்கட்செய்யும் பலனேபராபரமே (௮௪)

சாதிசனத்துடனே சார்ந்திருந்துபட்டதுயர்
போதும்போதும்போதும்போதும்பராபரமே (௮௫)

உற்றாரைநம்பியிருந் தொருபலனுங்காணாமற்
செத்தாலெனக்கதுதான் சின்னம்பராபரமே (௮௬)

செல்லுமுறையறிந்து சித்திவழிகாணாமற்
கல்லுமரம்போலானேன் கண்ணேபராபரமே (௮௭)
ஓங்காவுணையறிந்து மொருநிலையுங்காணாமற்
போகாமற்காத்தருளென் புணையபராபரமே (௮௮)
உன்னையறிவதற்கோ வுடலெடுத்தேனென்றெண்ணிச்
சின்னஞ்சொல்லுவார்கட்கென் செய்வேன்பராபரமே (௮௯)
தெரியாதவின்பத் தெளிவாயநுண்மையமாய்ப்
பரிபூரணமுடனே பாராப்பராபரமே (௯௰)
ஆச்சிதன்னைத்தேடி யாவலைவைத்தலையாமற்
பூச்சியரயேனோ பிறந்தேன்பராபரமே (௯௧)
காசைவிரும்பிக் கலங்கித்திரிந்துன்பால்
ஆசைவிரும்பா தலைந்தேன்பராபரமே (௯௨)
சாகாமற்செத்துதய சச்சிதானந்தமயப்
பாகமாயாகமும் பகராய்பராபரமே (௯௩)
வாராயோவையா வந்திரங்கிக்கொண்டணைக்கப்
பாராயோசற்றே பகராய்பராபரமே (௯௪)
ஆசைவலைப்பாசபொறி யத்தனையுங்கட்டறுத்து
வாசிதனிலேற்றியெனை வைத்தாய்பராபரமே (௯௫)
வேஷந்தனைப்போட்டு வேதாந்தசாத்திரத்தைக்
காசுபணம்பறிக்கக் கற்றேன்பராபரமே (௯௬)
செய்ததெல்லாங்குற்றஞ் சிறியென்றனக்கிரங்கிக்
கைதூக்கிக்கொண்டருளென் கண்ணேபராபரமே (௯௭)
மாளாமயக்கறுத்து மனக்கரையைத்தான்கழுவி
ஆளாக்கிக்கொள்வாயென் னையாபராபரமே (௯௮)
நாட்டமங்குமிங்கிருக்க [illegible]தாந்தமுத்திநிலை
காட்டாயெனைத்த[illegible]ளென்கண்ணேபராபரமே (௯௯)
சித்தைதனைத்தெளிந்து சித்திமுத்திபெற்றுயர்ந்த
உன்றன்குணங்குடியார்க் குயிரேபராபரமே (௱)

பராபரக்கண்ணி-முற்றிற்று ஆ பாடல் ௱௬௩,

றகுமான்கண்ணி.

பார்க்கப்பலவிதமாய்ப் பல்கவண்டத்தனையடை
காக்குந்திருக்கருணைக்கண்ணே றகுமானே. (௧)

ஈறுமுதலுமற்றே யியங்குகின்றசுச்சுடராய்க்
காரணிக்கும்பூரணமே கண்ணேறகுமானே (௨)

பாணிக்கவொண்ணாப் பதமபெறுதற்கென்சிரசைக்
காணிக்கைவைத்தேனென் கண்ணேறகுமானே (௩)

பொய்யடிமையாகிலுநான் பொன்னடிக்காளாகியென்னைக்
கையைக்கொடுத்தணைத்தாள் கண்ணேறகுமானே (௪)

பெண்டுபிள்ளையென்றே பித்துற்றசல்பொய்பல்லாமற்
கண்டபலனொன்றுமில்லை கண்ணேறகுமானே (௫)

பேதலித்தேனுன்னடிமை பேதகமில்லாமலுனைக்
காதலித்தேனண்டருள்செய் கண்ணேறகுமானே (௬)

ஏகப்பெருவெளியி லிருட்கடலிற்கம்பமற்ற
காகமதுவானேனென் கண்ணேறகுமானே (௭)

ஐயோவுனதருளி லாசையற்றபாவியென்னைக்
கையைநெகிழ்த்தாதருளென் கண்ணேறகுமானே (௮)

போதமயமாகவெங்கும் பூரணித்தகாரணத்தைக்
காதலித்துநின்றேனென் கண்ணேறகுமானே (௯)

எல்லார்க்குமுதனிக்கு மியல்புபோற்றேனைகட்கும்
கல்லுள்ளமுதனிக்குங் கண்ணேறகுமானே (௰)

சொல்லும்பதர்நீக்கிச் சும்மாயிருந்தருளைக்
கல்லாருங்கல்லேலயென் கண்ணேறகுமானே (௰௧)

வெட்டவெறும்பாவியென்ன வினையெல்லைத்தள்ளாமற்
கட்டியணைத்தாண்டருள்செய் கண்ணேறகுமானே (௰௨)

யானாதமேறு மாசர்பெறுவாழ்வுமுதற்
கானற்சலம்போலலவோ கண்ணேறகுமானே (௰௩)

எவருடைமையுமெடுத்திட்டென்னுடைமையென்பவர்க்குக்
கபரில்வருந்துணையே கண்ணேறகுமானே (௰௪)

ஊனெடுத்தநாண்முதலா வுபயோகமற்றயான்
கானினிலவானேனென் கண்ணேறகுமானே (௰௫)

வாசிதனிலேறி மனமகிழ்ந்துவாழாமற்
காசாசைகொண்டேனென் கண்ணேறகுமானே (௰௬)

வீடோவென்றேகம் விழுமிடந்தான்வீதிகளோ
காடோசெடியோவென் கண்ணேறகுமானே (௰௭)

பாகமுடன்வளர்த்த பாழுடறுநாய்க்கிரையோ
காகங்கழுக்கிரையோ கண்ணேறகுமானே (௰௮)

ஏக்கமலங்குமிங்கு மேகாந்தமாகவுனைக்
காண்கவந்துயாங்கருள்செய் கண்ணேறகுமானே (௰௯)

தொண்டுசெய்கின்ற துறவியர்களேயருளைக்
கண்டுகொள்ளக்கண்டாயென் கண்மணிறகுமானே (௨௰)

அல்லும்பகலு மடிமைமனந்தேம்புதற்குக்
கல்லுங்கரைந்திடுமென் கண்மணிறகுமானே (௨௧)

வேட்டைபெரிதென்றே வெறிநாயைக்கைப்பிடித்துக்
காட்டிற்புகலாமோ கண்மணிறகுமானே (௨௨)

அடைத்தமனக்கோட்டை யாருமைந்துகள்வரையுங்
கடத்தமுடிவதில்லை கண்மணிறகுமானே (௨௩)

மடம்புகுநாய்போல மயங்குமென்னையுன்னைவிடக்
கடத்துவாராக்காணேனென் கண்மணிறகுமானே (௨௪)

வையம்பொய்யென்றே மறையோலமிட்டதெல்லாங்
கையுமெய்யுமாச்சுதென்றன் கண்மணிறகுமானே (௨௫)

சொல்லருமெய்ஞ்ஞானச் சுடரொளிகண்டாலென்மனக்
கல்லுங்கரைந்திடுமென் கண்மணிறகுமானே (௨௬)

மாதாபிதாவுமென்னை மயக்கிமயக்கியுன்னைக்
காதலிக்கவொட்டாரென் கண்மணிறகுமானே (௨௭)

வெற்றிதருமெய்ப்பொருளே வேதாந்தத்துட்கருவைக்
கற்றோர்க்கருள்புரியுங் கண்மணிறகுமானே (௨௮)

உடையாபாணமென வுன்னியுன்னிப்பாவிமனங்
கடைப்படலாமோவென் கண்மணிறகுமானே (௨௯)

ஓயாக்கவலையினு ளுள்ளுடைந்துவாடுதற்கோ
காயமெடுத்தேனென் கண்மணிறகுமானே (௩௰)

நேசம்வைத் துன்னடிமை நின்பதத்திற்கல்லாது
காசுதனக்கோவென் கண்மணிறகுமானே (௩௧)

எண்ணுதற்கெண்ணமெல்லாமெண்ணியெண்ணியுன்னடிமை
கண்ணிக்குட்சிட்டானேனென் கண்மணிறகுமானே (௩௨)

பொய்யெடுத்தாவென்று பிறக்கணித்தாயாகிலென்னைக்
கையணைப்பாருண்டோவென் கண்மணிறகுமானே (௩௩)

விண்ணுடோர்காணு விரிகருணைச்செங்கடலாக்
கண்குளிரத்தந்தருள்செய் கண்மணிறகுமானே (௩௪)

தங்குபேரின்பமனைச் சார்ந்தகுருநாதனுக்கே
கங்குல்பகற்றானுமென் கண்மணிறகுமானே (௩௫)

தூங்காமற்றூங்கித் தொழுதுதொழுதுன்னருளைக்
காணக்கவலைக்கருள்செய் கண்மணிறகுமானே (௩௬)

இன்றுள்ளோர்நாளைக் கிருப்பதுபொய்யென்பதையான்
கண்டுகொண்டேனையாவென் கண்மணிறகுமானே (௩௭)

பெற்றற்றுநத்திதனைப் பிக்குழிவைப்பர்சாக்கடையைக்
காத்தேதன்வளர்த்தேதனென் கண்ணே றகுமானே (௩௮)

போதனைத்தனம்புதைத்த புல்லர்க்கிருப்பூசி
காதற்றதும்வருமோ கண்ணே றகுமானே (௩௯)

பாடிப்படித்தறிந்தும் பற்றற்றார்பாசவலைக்
காடுகொண்டுபோவாரோவென் கண்ணே றகுமானே (௪௰)

நிறைந்தபரிபூரணமே நீக்கமறவே நிர்மலமே
கருணைக்கடலேயென் கண்ணே றகுமானே (௪௧)

பார்ப்பாயோவென்றன்முக[illegible]
காப்பாயோவையாவென் கண்ணே றகுமானே (௪௨)

மெய்யெடுத்தநாள்முதலா மெய்யறியாப்பாவியெனைக்
கைவிடவேண்டாமென் கண்ணே றகுமானே (௪௩)

சோற்றுப்பொதியைச் சுமந்தேயலைந்துசுழற்
காற்றுத்துரும்பானேனென் கண்ணே றகுமானே (௪௪)

சேர்ந்தசுற்றந்தன்னைச் சிதறவிட்ட சிந்தையர்க்குக்
காந்தமலையேயென் கண்ணே றகுமானே (௪௫)

உலைவிடுமெழுகு நெய்ப்பாகவென்றனுள்ளம்
கலைதலதுகாரியமோ கண்ணே றகுமானே (௪௬)

ஆவிதனைக்குறங்கா வாட்டுகின்றவையறிவைக்
காலவிடாவருள்செய் கண்ணே றகுமானே (௪௭)

வேஷந்தனைப்போட்டு மெய்ம்மயக்கும்பொய்க்குருவாய்க்
காசுபணம்பறித்தேன் கண்ணே றகுமானே (௪௮)

எட்டிப்பிடிக்கும் விதமறிந்தாலுன்பதத்தைக்
கட்டிப்பிடித்திடுவேன் கண்ணே றகுமானே (௪௯)

அவியாமனமவிய வாயுங்கலையோர்கடமைக்
கவியுந்திருக்கருணைக் கண்ணே றகுமானே (௫௰)

சித்திரரூபவேதாந்தச் செழுஞ்சுடரைச்சின்மயத்தைக்
கற்றவர்க்குமுத்திதரு கண்ணே றகுமானே (௫௧)

அருவிசொரியும்படிக் கம்பத்திலன்புவைத்தால்
கருவிபிரியாதென் கண்ணே றகுமானே (௫௨)

மாராயவெள்ள மருங்கவிழ்ந்தநின்கருணைக்
காரார்மழைபொழியுங் கண்ணே றகுமானே (௫௩)

எண்படாதெண்ணமெல்லா மெண்ணிப்பெண்ணி நெஞ்சமொரு
கண்படாதலைந்ததோ கண்ணே றகுமானே (௫௪)

கோலங்குறியில்லாக் குருவடிதொழார்கண்மனங்
காலனிருப்பிடமோ கண்ணே றகுமானே (௫௫)

உள்ளுயிரினுள்ளே யுறைந்தபரஞ்சோதிவரிற்
கள்ளமனந்துள்ளாதோ வென் கண்ணே றகுமானே (௫௬)

சேர்க்குந்திரவியமுஞ் சித்திரமணிமண்டபமுங்
கார்க்குத்துணையோவென் கண்ணே றகுமானே (௫௭)

பட்டுடையுமொப்பனையும் பாக்கமுமென்னைவிட்டுக்
கட்டோடொழிவதிலை கண்ணே றகுமானே (௫௮)

எண்ணுதவெண்ணமெல்லா மெண்ணுதிருக்குமனங்
கண்ணுடிக்குண்முகமாங் கண்ணே றகுமானே (௫௯)

மஞ்ச[illegible]முந்தண்டிகையு மாளிகையுஞ்சாமரமுங்
கண்டுகழிக்க[illegible]ன் கண்ணே றகுமானே (௬௰)

மன்னுங்கருவி மௌனமணிப்பெட்டகத்தைக்
கன்னமிடப்போமோவென் கண்ணே றகுமானே (௬௧)

என்றுமன்னைசுற்றமுத லெனக்குப்பழிகாரரெனக்
கண்டறிந்துகொண்டேனென் கண்ணே றகுமானே (௬௨)

கொடியபனைத்துயரைக் கூடாதிருப்பவர்க்குக்
கடுகமுடுகிவருங் கண்ணே றகுமானே (௬௩)

ஏச்சுமதிமயக்கு மில்லார்களாலுடைதேங்
காய்ச்சிரட்டையானேனென் கண்ணே றகுமானே (௬௪)

விள்ளரியவேதம் விளைவுதலையுங்கடிந்து
கள்ளமனந்துள்ளுவதென் கண்ணே றகுமானே (௬௫)

வேதக்கருவை விளைகருணைக்குஞ்சரத்தைக்
காதலித்தேனுதரித்தாள் கண்ணே றகுமானே (௬௬)

அரும்பேமலரேயென் னாசைதரும்வாசனையே
கரும்பேரசமேயென் கண்ணே றகுமானே (௬௭)

பூரணமேயற்புதமே பொங்குகருணைக்கடலே
காரணமேயென்றனருட் கண்ணே றகுமானே (௬௮)

ஓயாதோவென்கவலை யுன்னருளாலென்கருவி
காயர்தோவையாவென் கண்ணே றகுமானே (௬௯)

ராஜாங்கம்வேண்டி ரதகஜங்களேறுதற்குக்
காசெங்குங்கேளேனென் கண்ணே றகுமானே (௭௰)

தங்கைதாரவென்றே தயங்குகின்றபாவிமனக்
கண்டிறக்கவந்தருள்செய் கண்ணே றகுமானே (௭௧)

அச்சமெமக்கில்லையென வைம்புலனென்பாழ்மனத்தைக்
கைச்சூறையாடிவிடென் கண்ணே றகுமானே (௭௨)

இனியவமிர்தம்பொங்கி யெங்குங்கரைதத்திவரக்
கனிவாய்திறந்தருள்செய் கண்ணே றகுமானே (௭௩)

ஆணையிட்டேனாணையிட்டே னையனேயுன்னருளைக்
காணவெனக்கருள்செய் கண்ணே றகுமானே (௭௪)

அல்லும்பகலு மறிவிலயமானோர்க்குக்
கல்லும்பிளந்திடுமென் கண்ணே றகுமானே (௭௫)

புவியுமெழுவானும் பொன்னுலகும்பல்லுயிருங்
கவியுந்திருக்கருணைக் கண்ணே றகுமானே (௭௬)

எண்ணரியதாக விருந்திடுஞ்சூத்திரமோ
கண்ணிலொளிபாய்ந்ததுவோ கண்ணே றகுமானே (௭௭)

உனையேயோவருக்கோவென் றுள்ளங்கழுவக்கழுவக்
கழுவாத்துடக்க[illegible] கண்ணே றகுமானே (௭௮)

உற்றவினைத்திரையு முறவின்முறைத்திரையுங்
கத்தரித்துவிட்டருள்செய் கண்ணே றகுமானே (௭௯)

நற்பவளக்கொம்பே நவமணிக்குமற்புதமே
கைப்பொருட்குமெய்ப்பொருளே கண்ணே றகுமானே (௮௰)

ஒப்புறவுதப்பி யுணர்வற்றுனைக்கைவிட்டுக்
கப்பரைகைக்கொண்டேனென் கண்ணே றகுமானே (௮௧)

பசப்பிப்பணம்பறிக்கும் பாவிக்குருமுகத்தைக்
கசப்பாகக்கண்டேனென் கண்ணே றகுமானே (௮௨)

வேதியர்க்குமாதவர்க்கு மெய்யடியார்கட்குமுனைக்
காதலிப்போருக்குமருள் கண்ணே றகுமானே (௮௩)

வேரைவேரோடறுத்து மெய்யடிமையர்க்குதற்கென்
காரியத்திற்றாமதமென் கண்ணே றகுமானே (௮௪)

பழகப்பழகிவரும் பாக்கியத்தைப்பைமுதலைக்
களவுகொடுத்தேனென் கண்ணே றகுமானே (௮௫)

நாமாண்மைகண்முழுது நாசமாக்கார்தமக்குங்
காமவினைபோமோவென் கண்ணே றகுமானே (௮௬)

அடிமையுனதபய மாகாதிருக்கிலுமென்
கடைவழிக்குக்கட்டமுதே கண்ணே றகுமானே (௮௭)

வேதாந்தவேதமெல்லா விட்டேறியேகடந்து
காதலித்துநின்றேனென் கண்ணே றகுமானே (௮௮)

இனமுஞ்சனமுமென வெண்ணியெண்ணியுன்னடிமை
கனசழக்குப்பட்டேனென் கண்ணே றகுமானே (௮௯)

நவசூத்திரத்தைவிட்டு நன்வினைவெண்ணுறு துன்மனங்
கவலைப்படுவதென்ன கண்ணே றகுமானே (௯௰)

மடிப்புக்கொலைகளவும் வஞ்சமுமென்னெஞ்சைவிட்டுக்
கடக்கநடப்பதில்லை கண்ணே றகுமானே (௯௧)

பலவிடத்தைச் சுற்றிப் பரதவித்துப் பாவிமனங்
கலங்கிமலங்குவதென் கண்ணே றகுமானே (௬௨)
உள்ளக்கராத்தா லுவந்துறவு கொள்ளாமற்
கள்ளமனந் துள்ளுவதென் கண்ணே றகுமானே (௬௩)
என்னுளுழ்சன் மற்ற மயக்கமறக் கல்லாக்
கண்டெடுத்துப் பாரோவெனக் கண்ணே றகுமானே (௬௪)
தேசிகனுமென்னுந் திருட்டுகெடுக்குஞ்சொல்லோர்
காசாய்மகிபேயெனன் கண்ணே றகுமானே (௬௫)
தன்னையறிந்து தவப்புரியாத்தனமையிலாக்
கன்னெஞ்சனனேனென் கண்ணே றகுமானே (௬௬)
வாடகூடங்கண்மணி பண்டு பழுமன்றுகளுங்
காடுகொள்ளக்கண்டேனென் கண்ணே றகுமானே (௬௭)
குரைவெரியவேசதறிக் கூப்பிடினுங்காணக்
கருவேகுருவேயென் கண்ணே றகுமானே (௬௮)
மருளாத்தவத்தான் மறப்புநினைப்பற்றவர்க்குக்
கருணைக்குணங்குடியாங் கண்ணே றகுமானே (௬௯)
உதிக்குமுணர்வன்றி யுணர்வோவுணர்வொன்றிற்
கதிக்குங்குணங்குடியென் கண்ணே றகுமானே (௭௰)

றகுமான்கண்ணி-முற்றிற்று-ஆ-பாடல்-௭௰.

எக்காலக்கண்ணி.

முத்திதரும்வித்தை முனையில்வைத்துச்சீராட்டிச்
சித்தமறவாம லினிப்பதினியெக்காலம் (௧)
ஆதியின்மேலுரையை யடர்ந்தெரித்தக்கினியின்
சோதியினுள்வெந்து கரைபெறுவதெக்காலம் (௨)
காமக்கடல்கடக்கச் சாத்திரக்கப்பல்வைத்து
நேமநிஷ்டைத்தம்ப நிறுத்துவதுமெக்காலம் (௩)
பங்கப்பழிப்பேசிறந்த பையன்யான்றையலர்கள்
கொங்கையைநான்பாராக் குருடாவதெக்காலம் (௪)
கொங்கைதனைப்பாராக் குருடாயிருப்பதுடன்
அங்கமுறிழ்மோக மழிவதினியெக்காலம் (௫)
அங்கமுரிழமோக மழிந்தேயறமெலிந்து
வங்கிவடுப்பால வாறன்னோர்வதெக்காலம் (௬)

வாசியிலேறி வலமிடந்தான்றி நடுபாமற்
றேசிதைப்போலத் திடப்படுவதெக்காலம் (௭)
தேசிதைப்போலத் தியங்காச்சுழிமுனையைய
நாசிநுனியிலதை நான்மறிப்பதெக்காலம் (௮)
நாசிநுனிகடந்து நாசமாயப்போகாமல்
வாசிபுமென்கையில் வசப்படுவதெக்காலம் (௯)
மையலெனுமாலை மார்புநிறையப்பூண்டு
தையலர்களெல்லாமெனை நாயாவதெக்காலம் (௰)
கஞ்சாவபினாங்குங் கறுப்பெனவுண்ணாமல்
எண்சாண்பனைக்கு ளிறக்கியுண்பதெக்காலம் (௰௧)
பொய்மெய்மிகுத்த புகாரியாலிமைப்பிலேபான
ஜீயாவென நேறப்பூஜை னடிபணிவதெக்காலம் (௰௨)
ஜீயாகூவென்ன வலறவடியுண்டவென்றன்
பொய்யானமெய்யின் பிழைபறுவதெக்காலம் (௰௩)
மருவுதலைமறந்து மனமுமதமிறந்து
இருகையுமேந்தி யிரந்துண்பதெக்காலம் (௰௪)
இருகையுமேந்தி யிரந்துகுடித்தேநான்
சருகாயுலர்ந்து சலிப்பறுவதெக்காலம் (௰௫)
ஆசானற்காலை யணைந்திருந்தேமொந்துசிலந்
தூசாடிப்பேசி யுணர்வருள்வதெக்காலம் (௰௬)
வாசிவாவென்று வருந்தெள்ளமுதமுண்டு
பேசிநான்வாழ்ந்தே பிழைதீர்வதெக்காலம் (௰௭)

எக்காலக்கண்ணி-முற்றிற்று ஆ-பாடல்-௭அய.

கண்மணிபராபரக்கண்ணி.

அத்துவிதமே பரிவகண்டிதாகாரக்
கர்த்தவியமேயென் கண்ணேபராபரமே (௧)
தற்பரமேசிற்பரமே தாவென்றுமின்றுதவுங்
கற்பகமேயற்புதமே கண்ணேபராபரமே (௨)
உடலேயுயிரே யுள்ளிருந்தெளிந்தசெந்தேனே
கடலேநிறையமுதே கண்ணேபராபரமே (௩)
கொட்டிவைத்ததிரவியமே குவித்தநவரத்தினமே
கட்டிப்பசும்பொன்னேயென் கண்ணேபராபரமே (௪)

சட்டாசவர்க்கமே சார்ந்தோர்குஞ்சரமே
கட்டழகுப்பெண்ணேயென் கண்ணேபராபரமே (௫)

செல்வப்பெருக்கே திரண்டமணிப்பொக்கிஷமே
கல்விக்களஞ்சியமே கண்ணேபராபரமே. (௬)

இன்னமுதேகண்டே பொன்னே கேசரமுக்கனியே
கன்னலரும்பாகேயென் கண்ணேபராபரமே (௭)

பிச்சாத்திரண்டமுதே பிரியாப்பெருவாழ்வே
காய்ச்சாச்செம்பொன்னேயென் கண்ணேபராபரமே (௮)

நற்பவளக்கொம்பே நவின்றமணிப்பேட்டகமே
கைப்பொருட்குமெய்ப்பொருளே கண்ணேபராபரமே (௯)

பட்டைக்கருப்புவட்டே பாகேகொண்டசர்க்கரையே
கட்டிக்கரும்பேயென் கண்ணேபராபரமே (௰)

துன்பக்கடலைத் தொலைத்தோர் திசைதீர்க்கும்
கம்பமற்றபாற்கடலே கண்ணேபராபரமே (௰௧)

பொய்ப்பொருள்களெல்லாம் புறக்களித்தபுண்ணியர்கள்
கைப்பொருள்சித்தியென் கண்ணேபராபரமே (௰௨)

பவக்கடலைநீக்திப் பரிவாய்க்கரையேற்றுங்
கவிழாமரக்கலமே கண்ணேபராபரமே (௰௩)

தம்பனங்கொண்டே தரித்துநின்றவோங்காரக்
கம்பத்தடியனேனென் கண்ணேபராபரமே (௰௪)

மலிகாதல்கொண்டகையான் மண்ணிற்கவிழ்ப்பதற்கே
கலகம்விளைத்துவிட்டாய் கண்ணேபராபரமே (௰௫)

தெள்ளியவான்சோதி தெளிந்துமெல்லவந்தணையுங்
கள்ளப்படுத்திவிட்டாய் கண்ணேபராபரமே (௰௬)

புண்ணீரொழுகிப் புழுங்குமனத்தினைப்போற்
கண்ணீர்கலங்கவிட்டாய் கண்ணேபராபரமே (௰௭)

பித்தர்கள்போலும் பிதற்றிக்காகம்போலுங்
கத்திகத்திச்சாகவிட்டாய் கண்ணேபராபரமே (௰௮)

போற்றுமற்சிந்தை பொருதுசமர்க்காற்றுமற்
காற்றுயப்பறக்கவிட்டாய் கண்ணேபராபரமே (௰௯)

நெற்பதர்க்கேயொப்பாக நிற்பதற்கோவென்றலையில்
கற்பித்துவிட்டுவிட்டாய் கண்ணேபராபரமே (௨௰)

சொல்லாச்சுயஞ்சோதிச் சுடர்கொழித்தநெஞ்சகருங்
கல்லாகச்செய்துவிட்டாய் கண்ணேபராபரமே (௨௰௧)

அவிழ்ந்தவிழ்ந்துசிந்தையுள்ளே தாசைவைத்ததத்தினையுங்
கவிழ்த்துப்பாழாக்கிவிட்டாய் கண்ணேபராபரமே (௨௰௨)

ஓசைமணிமண்டபத்தி லாட்புகாவண்ணமெனைக்
காசினியிற்சுற்றவிட்டாய் கண்ணேபராபரமே (௨௩)
வீண்காதறந்ததல்லால் யேற்றிலுனைக்கண்ணாலுங்
காண்கவரிதாக்கிவிட்டாய் கண்ணேபராபரமே (௨௪)
சேத்துமத்தினீப்போலென் சிந்தைதொத்திடவுமுனைக்
காட்டிமறைந்துவிட்டாய் கண்ணேபராபரமே (௨௫)
துட்டமாமாயைச் சுட்டெரிந்தகொள்ளிக்
கட்டைவிறகாக்கிவிட்டாய் கண்ணேபராபரமே (௨௬)
வேல்விழியார்காம வேட்டைநாவற்றிலெனைக்
கால்மாற்றவிட்டுவிட்டாய் கண்ணேபராபரமே (௨௭)
வீடுகாடென்று விதித்ததுவுமல்லாமற்
காடுவீடாகவிட்டாய் கண்ணேபராபரமே (௨௮)
ஓடாமலோடி புலனைசலைந்துசுற்றதற்கோ
காடோடவாக்கிவிட்டாய் கண்ணேபராபரமே (௨௯)
நீடோயானுன்றனக்கு மென்மீதிலேனுவிக்
காழ்நயஞ்செய்துவிட்டாய் கண்ணேபராபரமே (௩௰)
அச்சமிலாப்புல்வேட் டைவருக்குமெனனறிவைக்
கைச்சூளையாக்கிவிட்டாய் கண்ணேபராபரமே (௩௧)
வில்லங்கமற்று விளக்கொளிபோனின்றவெ[illegible]க்
வல்லங்கமாக்கிவிட்டாய் கண்ணேபராபரமே (௩௨)
மண்ணாதிமூவாசை மாமாயைமுற்கூட்டுக்
கண்ணியுள்ளிட்டாக்கிவிட்டாய் கண்ணேபராபரமே (௩௩)
கொண்டணைத்துக்கொள்ளுநீ குணங்குடியான்றிருவடியைக்
கண்டனைக்கநீயருளாய் கண்ணேபராபரமே (௩௪)
எட்டிலெழுதவொண்ணா விறைவேயுன்றன்வடிவைக்
காட்டிக்கொடுத்தருளாய் கண்ணேபராபரமே (௩௫)
மைச்சினிச்சிபோலு மணக்கோலப்பெண்போலுங்
கைச்சரசஞ்செய்தருளாய் கண்ணேபராபரமே (௩௬)
நிரியாசையற்று நிரஞ்சனமாய்நின்றிடநற்
கதியாசைதந்தருளாய் கண்ணேபராபரமே (௩௭)
நாதவிந்தால்நின்றுறவு நானென்றுபதேசங்
காதிலுரைத்தருளாய் கண்ணேபராபரமே (௩௮)
மாதவசுயாகி மலைமுழைபிற்புக்கவுன்மேற்
காதலொன்றுதந்தருளாய் கண்ணேபராபரமே (௩௯)
நிர்க்குணத்தைக்கொண்டு நிருவிகர்ப்பஞ்சாதிக்கக்
கற்குணத்தைத்தீர்த்தருளென் கண்ணேபராபரமே (௪௰)

ஜென்மத்தொலைத்தடிமை சின்மயமாய்நின்றிடவுங்
கன்மந்தொலைத்தருளாய் கண்மணிபராபரமே (௪௧)
சித்தியொளிபரப்பிச் சிதறுநவகண்டாயோ
கத்தனையுந்தந்தருளாய் கண்மணிபராபரமே (௪௨)
அட்டாங்கயோகமதி லாசையுறவேயெனது
கட்டைவெட்டுமுன்னருளாய் கண்மணிபராபரமே (௪௩)
விற்புருவத்தூடு விளங்குமொளியத்தாடக்
கற்பித்தருளாயென் கண்மணிபராபரமே (௪௪)
ஒப்பிலருளாழி யோடவடியேற்குமொரு
கப்பலாய்வந்தருளாய் கண்மணிபராபரமே (௪௫)
உனையாள்வோமென்றடிமை யுள்ளங்குளிர்ந்திடநின்
கனிவாய்திறந்தருளாய் கண்மணிபராபரமே (௪௬)
பொய்கோத்தமெய்யதனைப் போட்டுவிடுமுன்னமெனைக்
கைகோத்தணைத்தருளாய் கண்மணிபராபரமே (௪௭)
வாய்ச்சுதெளக்கென்று மகிட்சிகொண்டுநின்றிடநின்
காட்சியளித்தருளாய் கண்மணிபராபரமே (௪௮)
மலைக்குமலைநிறைந்து மனுவாகவேலைமனக்
கலக்கந்தவிர்த்தருளாய் கண்மணிபராபரமே (௪௯)
நாளுமடவாலா நனைக்கரூவக்கனவுங்
காணுதகாத்தருளாய் கண்மணிபராபரமே (௫௰)
தொண்டரிடஞ்சென்றிடவுந் தொண்டுசெய்துநின்றிடவுங்
கண்டித்துவைத்தருளாய் கண்மணிபராபரமே (௫௧)
மூலவர்க்கமாக முழுமதிப்பாலுங்கொடுத்து
காலபயந்தீர்த்தருளாய் கண்மணிபராபரமே (௫௨)
சோற்றுலெடுத்து சுவரிழியாமற்பாது
காத்துமுகம்பார்த்தருளாய் கண்மணிபராபரமே (௫௩)
மூலக்கனல் மூட்டி மூட்டிவருகாலனையுங்
காலாலுதைத்தருளாய் கண்மணிபராபரமே (௫௪)
சிட்டனெவும்பூசை செய்தேனுயிப்பாவிக்
கட்டைகடத்தேறவைத்தாள் கண்மணிபராபரமே (௫௫)
எட்டுமொரெட்டையு மெட்டெட்டுக்கயிறதனுற்
கட்டவுநல்விஷிடம்வைத்தாள் கண்மணிபராபரமே (௫௬)
ஆதாரமாறுமடுக்கடுக்காகக்கடத்திக்
காலிக்குமேமேலத்தில்வைத்தாள் கண்மணிபராபரமே (௫௭)
கும்பித்திரேசித்துட் கொண்டும்படிக்குதவிக்
கம்பமுனைகாட்டிவைத்தாள் கண்மணிபராபரமே (௫௮)

பட்டிப்பசுப்பாலை பக்குவத்துடன்காலைக்
கட்டிக்கறந்தளித்தாள் கண்ணேபராபரமே ௫௯

நில்லாவுடற்குநிலையுங்கொடுக்குமொரு
கல்லாவின்பாலளித்தாள் கண்ணேபராபரமே ௬௰

சோமப்பாலூட்டிச் சாந்தலாமப்பாலுங்
காமப்பாலுங்கொடுத்தாள் கண்ணேபராபரமே ௬௧

மண்டைநடுமண்டலத்துண் மண்டியமுதுண்டிடவுங்
கண்டங்கடத்திவைத்தாள் கண்ணேபராபரமே ௬௨

மூலாதாரத்துள் மூலைகொண்டுயர்த்தெழுந்த
காலாற்கனலெரித்தாள் கண்ணேபராபரமே ௬௩

ஆயுங்கலையிரண்டு மாயாதடக்கியெந்தன்
காயத்திலக்கவைத்தாள் கண்ணேபராபரமே ௬௪

அற்பவுடலா லருந்தவமேபுரிந்திடவுங்
கற்பமுறைகைக்களித்தாள் கண்ணேபராபரமே ௬௫

அண்டபிண்டமென்றுனின் றாடுந்திருக்கூத்தைக்
கண்டுகளிகூரவைத்தாள் கண்ணேபராபரமே ௬௬

எண்ணுதவெண்ணமெல்லா மெண்ணூடலெண்ணமெனக்
கண்ணாடிக்குள்ளளித்தாள் கண்ணேபராபரமே ௬௭

எவ்வுலகுந்தானா யிருந்தவனையான்றொழவுங்
எவ்வுமலக்கட்டறுத்தாள் கண்ணேபராபரமே ௬௮

அற்பவுடலமறிந்திடுமுன்றீபமிட்ட
கர்ப்பூரமாக்கிவைத்தாள் கண்ணேபராபரமே ௬௯

விலங்கினங்களோட வீற்றிடவுமேழைநெஞ்ச
கலங்காதிண்ணம்வைத்தாள் கண்ணேபராபரமே ௭௰

அடுத்துக்கெடுக்கு மரிவையர்க்காளாகாமற்
கட்டக்கடத்திவைத்தாள் கண்ணேபராபரமே ௭௧

நாற்றந்தொலைவ நறவனையநாரியர்தங்
காற்றும்படாதுவைத்தாள் கண்ணேபராபரமே ௭௨

ஆணிப்பொன்மேரு வாமுனையமுன்னடிமை
காணுங்கருணைவைத்தாள் கண்ணேபராபரமே ௭௩

வனவாசமேக வரமளித்துன்பொற்பதத்தைக்
கனமாயிறைஞ்சவைத்தாள் கண்ணேபராபரமே ௭௪

எட்டிப்பிடித்தாலு மெட்டாதுனின்றவனைக்
கட்டிப்பிடிக்கவைத்தாள் கண்ணேபராபரமே ௭௫

மதவேதமோதி மறைக்குமறைசொல்வதெல்லாங்
கதையாய்முடித்துவைத்தாள் கண்ணேபராபரமே ௭௬

அண்டபிண்டமாயுமதற் கப்பாலுநின்றவெளி
கண்டவுனைக்காட்டிவைத்தாள் கண்மணியே பராபரமே
உலையிலிடு[illegible]மெழுகா யுள்ளம்பதைத்துருகிக்
கலங்கியதுங்கண்டிலையோ கண்மணியே பராபரமே
வெம்பியிகநொந்துதன் மெலிந்தேனென்கண்ணீருங்
கம்பலையுங்கண்டிலையோ கண்மணியே பராபரமே
மெத்தமயலுற்று விருப்பமொடுயன் னூலுங்
கற்றும்பாழாக்கிவிட்டேன் கண்மணியே பராபரமே
பாலங்கடத்துபெரும் பாதைநடவாமலும்வீண்
காலங்கடத்திவிட்டேன் கண்மணியே பராபரமே
சுத்தமலரெடுத்துன் பொன்னடியாலுமென்றுங்
காத்திருந்துபூசைசெய்வேன் கண்மணியே பராபரமே
விண்கொண்டுநின்று விளங்குமுனைமெய்க்காலங்
கண்கொண்டுகாண்பேனென் கண்மணியே பராபரமே
ஐயோவென்செய்வே னொருமற்றபாவியைநீ
கைவிடலாமோவென் கண்மணியே பராபரமே
நட்டநடுவீடுசென்று நானொளித்திருந்துனையுங்
கட்டித்தழுவேனோ கண்மணியே பராபரமே
அல்லும்பகலுமடியேன்படுந் துயர்க்குக்
கல்லுங்கரைந்திடுமென் கண்மணியே பராபரமே
பொன்னைப்புதைத்துவைத்துப்போவாருளந்தோறுங்
கன்னங்கருநிறங்காண் கண்மணியே பராபரமே
பணத்தைப்பணமெனவும் பார்த்ததுண்டோவுன்றனுக்கென்
கணக்குத்தெரியாதோ கண்மணியே பராபரமே
நிற்கும்பொழுதாடை நெகிழ்ந்தாலுபசாரங்
கைக்குஞ்சொலுவதுண்டோ கண்மணியே பராபரமே
தடையிலுலகனைத்துந் தானாயிருந்துமொரு
கடுகிடையுமானாயென் கண்மணியே பராபரமே
உனக்குளெனைமறந்தோ ருள்ளக்கருத்திலுண்மாங்
கனிக்குளுறுவல்லோனாய் கண்மணியே பராபரமே
நெக்குருகிநின்றதிலே தோன்றுதனிர்க்குணத்தார்
கைக்குட்படித்தாடிநின்றாய் கண்மணியே பராபரமே
பதித்தமனம்வாழி பமரார்த்தமும்வாழி
சுதித்தனிலைவாழி கண்மணியே பராபரமே
அத்துவிதம்வாழி யறிவகண்டிதம்வாழி
கர்த்தனேநீவாழி கண்மணியே பராபரமே

தற்பரமேவாழி தாராதுதந்தருளிவும்
கற்பகமேவாழியென் கண்ணே பராபரமே (௧௫)
சிற்பரமேவாழி சிவயோகியர்வாழி
சற்புனையெல்லாமவாழி கண்ணே பராபரமே (௧௬)
நற்பதவியும்வாழி நவின்றன்மறைவாழி
கற்பாரிகள்வாழி கண்ணே பராபரமே (௧௭)
சித்தர்கணம்வாழி சின்மயந்தானும்வாழி
சர்த்தவியம்வாழியென் கண்ணே பராபரமே (௧௮)
மாதவத்தோரும்வாழி மௌனமுத்திரையும்வாழி
காதலித்தோரும்வாழி கண்ணே பராபரமே (௧௯)
குவலயத்தோரும்வாழி குணங்குடியாரும்வாழி
கவலையற்றோரும்வாழி கண்ணே பராபரமே (௨௰)

கண்மணிமாலைக்கண்ணி முற்றிற்று-ஆக பாடல் அஅம,

மனோன்மணிக்கண்ணி.

மெய்தொழவுமேலு மேலூர்திகேஸ்வரனை
கைதொழவுங்கனவு கண்டேன்மனோன்மணியே (௧)
கோப்பாகவுன்னையான் கொண்டாடிப்பாடவுநீ
காப்பாகவுங்கனவு கண்டேன்மனோன்மணியே (௨)
பெண்கணிர்த்தத்தோடுன்னையான் பிரியாமணம்புணரக்
கண்களுறங்காக்கனவு கண்டேன்மனோன்மணியே (௩)
மலர்ந்திருக்கும்பொற்கமல மணவறையிலிருவருங்கை
கலந்திருக்கவுங்கனவு கண்டேன்மனோன்மணியே (௪)
மெய்மஞ்சட்குளிர்ப்புநன் விழிப்புமெக்களிப்புமென்னைக்
கைமிஞ்சவுங்கனவு கண்டேன்மனோன்மணியே (௫)
மைதிட்டவுஞ்செயற்கண் மலரின்மகர்முலையிற்
கைபூட்டவுங்கனவு கண்டேன்மனோன்மணியே (௬)
மெய்தழுவவும்மிருவர் மெய்யோடுமெய்நெருங்கக்
கைதழுவவுங்கனவு கண்டேன்மனோன்மணியே (௭)
வாமப்பாலைப்பெருக மறுவாலிபம்வருக
காமப்பாலுண்ணக்கனவு கண்டேன்மனோன்மணியே (௮)
பாலனாகவுங்கான்ற பாலுணவுமென்னைவிட்டுக்
காலனேகவுங்கனவு கண்டேன்மனோன்மணியே (௯)

வடியாவருளமிர்தம் வடியவடியக்குணங்
குடியாகொடுகளைவித் குடித்தேன்மனோன்மணியே (௰)
கோடிபெருமதிகள் கூடுமொருமதிபோல்
வாடியென்யானேனெம் மானேமனோன்மணியே (௰க)
கண்ணேயென்கண்மணியே கண்குளிர்ந்தகட்டழகுப்
பெண்ணேயமிர்தப் பிழம்பேமனோன்மணியே (௰உ)
பெண்ணேமயிலினமே போனேம்பெயன்றுணையென்
கண்ணிற்கிடைக்கக் காண்பேன்மனோன்மணியே (௰ங)
அன்னவுடைக்குமுன்றன் வாலவயதினுக்கும்
அன்னநடைக்குமென்ற னாசைமனோன்மணியே (௰ச)
கூந்தலிலங்கக் குரும்பைத்தனங்குலுங்க
நேர்த்துநடப்புரிந்து னிற்பாய்மனோன்மணியே (௰ரு)
துவருநர்துடியிடையுந் தோகைமயினடையும்
பவளவிதழுமென்று பார்ப்பேன்மனோன்மணியே (௰சு)
மலர்மாலைகள்கட்டு மார்பிற்பின்னலாடுமுன்றன்
அலர்முலையும்யானென் றணைவேன்மனோன்மணியே (௰எ)
வெயிற்பட்டாலும் வெதும்புமுடலாயுனது
மெய்யிற்பெருட்டாலுங்கதம் வீசும்மனோன்மணியே (௰அ)
காற்றுப்பட்டாலுங் கலங்குமென்றன்மேனியுநீ
பார்த்துத்தொடவின்பம் படைப்பேன்மனோன்மணியே (௰கூ)
பிடியானைப்போலுன் பிடிப்பேன்முலையைக்குணங்
குடியானைப்போலுங் குடிப்பேன்மனோன்மணியே (உ௰)
கூந்தலுக்குநெய்தோய்த்துக் குளிர்மஞ்சனீராட்டி
வார்த்துசிங்காரித்து வைப்பேன்மனோன்மணியே (உக)
காலிற்பனிநீர்விட்டுக் கழுவிமடிமீதுவைப்பேன்
மேலிலத்தரும்பூசி விடுவேன்மனோன்மணியே (உஉ)
காதம்பரிமளிக்குங் கஸ்தூரிப்பொட்டிடுவேன்
போதுஞ்சவ்வாதணிந்து புணர்வேன்மனோன்மணியே உங
தலைக்குயிலுக்கெண்ணெய் தடவிச்சடைபின்னிவைப்பேன்
முலைக்குவன்னக்கச்சிறுக்கி முடிப்பேன்மனோன்மணியே உச
கட்டாடைவர்க்கமெல்லாங் கண்டுகளித்துயர்ந்த
பட்டாடைவர்க்கம்வைத்துப் படைப்பேன்மனோன்மணியே உரு
மூக்குகுத்திகாதுகுத்தி முழுவயிரத்தூக்கிவைப்பேன்
கோக்குமுத்தூர்தூக்குமுத்துங் குவிப்பேன்மனோன்மணியே
கைக்குஞ்சுகடகங் கல்லுமிழைத்துக்கொடுப்பேன்
மொய்க்குழற்குஞ்சைப்பில்லை முடிப்பேன்மனோன்மணியே

தங்கக்கொலுசுஞ்சிலம்புந் தண்டைரத்னபாடகமுஞ்
கொங்கைக்குமோகனமாலை கொடுப்பேன்மனோன்மணியே ௨௮
காலாழிபீலிமுதற் கன்னசையும்பொன்னகையும்
நாலாட்சுமைவேண்டி னடக்குமனோன்மணியே ௨௯
முடியீதினுமகுட முடிசூட்டுவேனற்குணங்
குடிமாதவர்கள் குலக்கொழுந்தேமனோன்மணியே ௩௰
சன்னிதானத்திற் சரணஞ்சரணமென்று
சொன்னமலர்தூவித் தொழுவேன்மனோன்மணியே ௩௧
கர்ப்பூரமேற்றிக் கரத்தீபவாலாத்தி
எப்பாரும்போற்ற வெடுப்பேன்மனோன்மணியே ௩௨
முக்காலமும்பூசை முடிப்பேன்முக்காலமல்லால்
எக்காலமும்பொங்க லிடுவேன்மனோன்மணியே ௩௩
சாதத்தளிகைச்சமைத்துச் சாம்பிராணித்தூபமிட்டுப்
பாதந்தொழுதிட்டுப் படைப்பேன்மனோன்மணியே ௩௪
பச்சைப்பருப்புமுதற் பருப்பிற்பத்துவகைகடைவேன்
வச்சநறுநெய்யுருக்கி வார்ப்பேன்மனோன்மணியே ௩௫
முட்டைப்பொரிப்பேன் முழுகோழியும்பொரிப்பேன்
நட்டைப்பீங்கானிற் றருவேன்மனோன்மணியே ௩௬
ஆட்டுக்கறியுங்கொள்வே னிலனாந்தவ்வகைசமைப்பன்
கூட்டுக்கறியும்பண்ணிக் கொடுப்பேன்மனோன்மணியே ௩௭
குட்டிக்கறிதானுங் குழம்புபண்ணித்தாளித்தே ர்
சட்டிக்கறியேனுந் தருவேன்மனோன்மணியே ௩௮
பால்பழமுந்தேனும் பலகாரவர்க்கங்களும்
மேலும்மேலும்பரப்பி விடுவேன்மனோன்மணியே ௩௯
அடிக்காயிரம்பொன்விலை யாறுமதீந்தகுணங்
குடிக்குண்மாளிகைகட்டிக் கொடுப்பேன்மனோன்மணியே ௪௰
ஆணிப்பொன்மதிலுயர்த்தி யரண்மனையுந்திர்ப்பாக
மாணிக்கமேவிளக்கால் வைப்பேன்மனோன்மணியே ௪௧
துலங்குமணிமண்டபமுஞ் சொர்க்கமெனவுமிலங்கா
இலங்குமலங்காரஞ்செய் திடுவேன்மனோன்மணியே ௪௨
ரத்தினங்கள்வைத்திழைத்திரமுவைப்பகலாக்குஞ்
சித்திரங்கள்வகைவகையாய்ச் செய்வேன்மனோன்மணியே ௪௩
மண்ணுயமூர்ந்தமன் மனமேமுழுவதினுங்
கண்ணாடியாயிருக்கக் காண்பேன்மனோன்மணியே ௪௪
மங்காதொளிபரப்பும்மௌனமணியாலுமொரு
சிங்காசனமேடை செய்வேன்மனோன்மணியே ௪௫

நாற்சால்சீ சட்டில்பல நற்பவளவாசனங்கள்
நீக்கமறச் சுற்றும் நிறைப்பேன்மனோன்மணியே ௪௬
பாதர்பூசித்துப்பணிவிடைகள்செய்துநிதங்க
மாதர்களோவனர்தம் வைப்பேன்மனோன்மணியே ௪௭
புவனத்தரசரெல்லாம் போற்றிப்பணியவென்றன்
மௌனமலரணைமேல் வாழ்வாய்மனோன்மணியே ௪௮
கட்டிலினுங்கூடி களிகூர்ந்துகொண்டிருப்போம்
தொட்டிலினூடிச் சுகிப்போம்மனோன்மணியே ௪௯
முடிமன்னர்தம்வாழ்வு முதலெல்லவையுமெங்கள்குணங்
குடிமன்னர்தம்வாழ்வும் வைப்பேன்மனோன்மணியே ௫௰
சொன்னமலைமலையாய்த் தொகைவகையிலாதளிக்கும்
கன்னெனவுமெனைக் காண்பாய்மனோன்மணியே ௫௧
போததனம்புனைதத்த பொக்கிஷமுங்கைகுவிப்பேன்
பாதத்தினும்வீழ்ந்துபணிவேன்மனோன்மணியே ௫௨
கிடையாப்பொருள்களெல்லாங் கிடைக்கும்னைநீயுமென்றாற்
படையாப்பொருள்களெல்லாம்படைப்பாய்மனோன்மணியே ௫௩
தானசமுத்திரம்போச் சான்றோர்க்கெல்லாமளிப்பாய்
சேனசமுத்திரமுஞ் சேர்ப்பாய்மனோன்மணியே ௫௪
முடிதாங்குமன்னர் முதலெவருமுன்வாயிற்
படிகாக்கும்வாழ்க்கைப் படைப்பாய்மனோன்மணியே ௫௫
கவிராஜரும்விருது சட்டியங்கள்கூறிநிற்பார்
குவாஜரும்போற்றத் தவமூர்மனோன்மணியே ௫௬
உன்மேலாசித் துயிர்பொருளுன்றோட்களிப்ப
எஃஸ்ரீதிலாசையுனக் கிலையென்மனோன்மணியே ௫௭
உள்ளதுரியதெல்லா மொப்புக்கொண்டபின்னலவோ
கள்ளமனம்படைக்கக் கற்றாய்மனோன்மணியே ௫௮
வேசைக்குணத்தை விரும்புவாயென்றறிந்தாற்
காசுப்பணத்தைநான் காட்டேன்மனோன்மணியே ௫௯
படையாதெல்லாமென்றாற் படைத்துப்பாதேசிகுணங்
குடியாரையோதேடிக் கொண்டாய்மனோன்மணியே ௬௰
உத்தமிப்பெண்ணென் றுவந்தேனிப்போதுன்றன்
பத்தினித்தனத்தைநன்றாய்ப் பார்த்தேன்மனோன்மணியே ௬௧
என்பத்துனக்கிருந்தா லிராஜாமேஜஸ்பரியாய்
ஐம்பத்தறுதேசமுநீ யாள்வாய்மனோன்மணியே ௬௨
உள்ளமணவாள னுனக்கெவனோவென்னைவிடக்
கள்ளமணவாளனிச்சை கடிதோமனோன்மணியே ௬௩

வேசியென்றபேர்படைத்து வெளியிற்புறப்பட்டவளைத்
தாசியென்றுசொல்லத் தகாதோமனோன்மணியே (௬௪)

ஆடாதுமாடி யவிசாரியானவளைப்
பாடாதும்பாடிலென்ன பயமோமனோன்மணியே (௬௫)

மூக்குமுனைக்குமுழம் மூலைமேற்பத்தினிபோல்
நாக்குமுனைக்குமுழம் நாலேன்மனோன்மணியே (௬௬)

பானைச்சோறெல்லாம் பதம்பார்த்துத்தின்றதினி
யானைமடியிலுயிர் மயிர்தான்மனோன்மணியே (௬௭)

இனிக்கண்டறிந்துகொள விவனென்பிள்ளையானாற்
றனிக்கண்டபோதுபுத்தி தருவான்மனோன்மணியே (௬௮)

பல்லையிதழ்கடிக்கப் பாளைதடியொடிக்கக்
கல்லைத்தேங்காயுடைக்கக் காண்பாய்மனோன்மணியே (௬௯)

தடிபோலிருந்துளையான் சாதிகெட்டபாழுங் குணங்
குடியார்க்கெப்படிகூட்டிக் கொடுப்பேன்மனோன்மணியே (௭௰)

போனதெல்லாம்போச்சுப் பொழுதும்விடிந்ததினி
நானதெல்லாமனத்தினுடேன்மனோன்மணியே (௭௧)

மல்லார்ந்துநான்படுத்து மார்பிற்றூப்பிக்கொண்டபினும்
பல்லைக்குத்திமுகர்ந்தோ பார்ப்பேன்மனோன்மணியே (௭௨)

என்னைவிட்டால்மாப்பிளைமா ரொத்தவனைப்போலுன்றனுக்கே
உன்னைவிட்டாற்பெண்ணெனக்கு முண்டோமனோன்மணியே ()

தடித்தனமேசெய்தாலுஞ் சமுசாரத்திற்படிந்து
குடித்தனஞ்செய்தாலென்மனக் குறையோமனோன்மணியே ()

தொடுத்தணைத்துக்கொண்டே துயில்வன்மற்றநேரமெல்லாம்
எடுத்தணைத்துக்கொண்டே யிருப்பேன்மனோன்மணியே (௭௫)

படுத்துப்படுத்துநெஞ்சிற் பளிச்சுபளிச்சென்றுமுத்தங்
கொடுத்துக்கொடுத்துநான் கொள்வேன்மனோன்மணியே (௭௬)

வன்னச்செழும்பவள வாயிதழூறற்சுவைத்துன்
கன்னத்தில்வீழ்ந்து கடிப்பேன்மனோன்மணியே (௭௭)

கற்சிறுக்குமாதரின்பங் கைச்சிறுக்கும்போதவின்பம்
வைச்சிறுக்குங்கொங்கையிற்கை வைப்பேன்மனோன்மணியே ()

தித்தித்தொழுகுங்காம தேனமிர்தவூறலுண்பேன்
முத்திதழுவித்தழுவி முயப்பேன்மனோன்மணியே (௭௯)

படியோர்க்கெல்லாமுயன்ற படியோர்களான்குணம்
குடியோர்கள்போலுமின்பங் கொள்வேன்மனோன்மணியே (௮௰)

சேயாயுமென்மடியிற் செங்கீரையாடியருட்
[illegible]யாயுமங்கை தருவாய்மனோன்மணியே (௮௧)

அங்கைதந்துதந்தே யணைத்தணைந்தாருள்ளமிர்தங்
கொங்கைதந்துதந்தே கொடுப்பாய்மனோன்மணியே (௮௨)
தாவியணைத்தணைத்தென் றாயேயுனையென்றிந்தப்
பாவிமடியில்வைத்துப் பார்ப்பேன்மனோன்மணியே (௮௩)
ஏங்கியழுவேனோவுன் னிணையடியைக்காணமற்
றாங்கிவிழுவேனோவென் றோழிமனோன்மணியே (௮௪)
உலைபோலெரியுமென்ற னுளங்குளிரமேல்வளர்ந்த
மலைபோலெழுந்தருளி வருவாய்மனோன்மணியே (௮௫)
கன்மமறவெந்தக்காலமோயானறியேன்
நன்மைதருவதெந்த நாளோமனோன்மணியே (௮௬)
பன்னீரொழுகுமென்றன் பாதமலரையென்றன்
சென்னிமீதென்றுமருள் செய்வாய்மனோன்மணியே (௮௭)
தாயினுமிக்காங்கருணைத் தயாநிதியேயிவ்வுளையை
நாயினுமிக்காங்கடையே னவின்றேன்மனோன்மணியே (௮௮)
கால்பிடித்துக்கண்ணில்வைத்துக் கைகுவித்துமெய்மயங்கி
மால்பிடித்துச்சொன்னதெல்லா மகிழ்வாய்மனோன்மணியே ()
அடியானையுன்னடியார்க் கடியானுமாக்கிகுணங்
குடியானவெனப்பிரியங் கொடுப்பாய்மனோன்மணியே (௯௰)
உச்சிதவச்சிரமலையே யொப்பொன்றிலாமாணிக்கமே
சச்சிதப்பச்சை மரகதமேமனோன்மணியே (௯௧)
செப்புருவாணிமுத்தே சிறந்தபவளக்கொடியே
புட்பராகக்கமலப் பூவேமனோன்மணியே (௯௨)
கோமேதகமே குழைந்தவயிடூரியமே
மாமேருவேநீல மலையேமனோன்மணியே (௯௩)
வற்றாவருட்செல்வ வாழ்வேகருணாநிதியே
பொற்றாமரைக்கமலப் பொருட்டேமனோன்மணியே (௯௪)
அல்லிமலரோ. மலர்செங்கழுநீர்மலரோ
மல்லிகைக்கொத்து மலரோமனோன்மணியே (௯௫)
பொன்மலரோ பன்மலரோ புகழ்தருபன்னீர்மலரோ
மன்மதபாணமா மலரோமனோன்மணியே (௯௬)
குடலினிறைந்ததொரு கொத்தலரிச்செம்மலரோ
மடலவிழ்ந்தசெந்தாழை மலரோமனோன்மணியே (௯௭)
பூக்குமருண்மலரோ புளிக்காதமாமலரோ
வாக்குமலரோகண் மலரோமனோன்மணியே (௯௮)
வஞ்சியர்செய்மோகமுடன் மறலிசெய்நாசத்திற்கும்
அஞ்சியுனக்கடிமை யானேன்மனோன்மணியே

அடியாரும்வாழியிந்த வடிவேனும்வாழிகுணங்
குடியாரும்வாழிகுணக் குன்றேமனோன்மணியே (௱)

மனோன்மணிக்கண்ணி - முற்றிற்று - ஆகப்பாடல் கூ௱அ

உமையாள்பாதமுன்னிற்க.

ஆதியந்தங்கடந்தவுமையாடன்பாதம்
அகண்டபரிபூரணமா மையர்பாதஞ்
சோதியந்தங்கடந்தகணபதியின்பாதந்
தொழுதிறைஞ்சிக்கரங்குவித்துப்போற்றல்செய்து
வாதியந்தங்கடந்தநந்திபாதமென்றும்
வாலைதிர்வாணிமனோன் மணிபாதமென்றும்
ஓதியந்தங்கடந்தகண்ட மிரண்டதாக
ஒன்றுமதியாவக்குனுணைசெய்தானே

நந்தீஸ்வரக்கண்ணி

ஆதியந்தங்கடந்தவுமை யாளருளுதாந்தச்
சோதியந்தங்கடந்தசெழுஞ் சுடரோநந்தீஸ்வரனே (௧)
முடியடிபாய்நின்றநடு மூலமணிவிளக்கே
அடிமுடியாய்நின்றநடு வணையேநந்தீஸ்வரனே (௨)
கர்த்தனையாளுன் கருணைத்திருவடிக்கே
எத்தனைதாண்டெண்ட விடுவேனோநந்தீஸ்வரனே (௩)
தீர்க்கதெண்டனிட்டேன் திருவடியைப்போற்றிசெய்தேன்
வாக்குநடக்க வரமருணந்தீஸ்வரனே (௪)
மாசில்பரவெளியே மௌனமணி மாளிகையில்
வாயிற்பெருவழியே மகத்தேநந்தீஸ்வரனே (௫)
மகத்தோனேஞான மழையேயருள்வெள்ள
முகத்தோனேமோன முனையேநந்தீஸ்வரனே (௬)
ஞானம்விளைவேற்று நல்லசமுசாரிகட்கு
மோனமழைபூற்று முகிலேநந்தீஸ்வரனே (௭)
மும்மூலயோக முழுதுஞ்சித்திசெய்துதா
உன்னுலேயாகு முயிரோநந்தீஸ்வரனே (௮)

சமர்கொடுத்துவென்றோங்கு சாம்பவிமலைக்கைப்படுத்தித்
தமர்விடுத்துநீக்கித் திருவாய்நந்தீஸ்வரனே (௯)
நல்லோர்க்குநீகாட்ட நல்லருங்குணங்குடிவாழ்
வெல்லோர்க்குநேர்காட்ட வெளிதோநந்தீஸ்வரனே (௰)
இல்லின்டங்கூட்டி யிதழ்விரியுஞ்செங்கமல
வல்லிவீட்டைக்காட்டி வைப்பாய்நந்தீஸ்வரனே (௰௧)
சாயிதனையுஞ்சுத்த சைதந்தியமானசிவ
சாயிதனையுமென்று காண்பேனந்தீஸ்வரனே (௰௨)
உமையாளுமெய்யா யுலர்தடிமைகொள்ளும்வண்ணம்
எமையாளுமையா விளம்பேநந்தீஸ்வரனே (௰௩)
கேசரத்தைக்காட்டிக் கிளரொளியாடன்னருட்டால்
ஆசரித்தேதூட்ட வருள்வாய்நந்தீஸ்வரனே (௰௪)
சத்திசிவமுதலாச் சாம்பவியம்பாளருளித்
தெத்தசிவமூதலாய்ச் சித்தாய்நந்தீஸ்வரனே (௰௫)
சித்தாவெவீன்ற சிறுபெண்ணைத்தாயிரண்டு
பொற்றுளையென்றே புணர்வேனந்தீஸ்வரனே (௰௬)
பத்துவயதுடைய பாலையைமையன்றோதி
சித்தர்களெல்லாந்தாயாகச் செய்தாய்நந்தீஸ்வரனே (௰௭)
காமருபியைநித்ய கல்யாணசுந்தரியை
ஓமருபியைப்பெற்று முதிவுநந்தீஸ்வரனே (௰௮)
கேசரியாடன்கருணை கிட்டின்றோவாசாம
கோசரமாழ்வெல்லாங் கொடுப்பாய்நந்தீஸ்வரனே (௰௯)
மூலவொளிகூட்டி மோனக்குணங்குடிக்கும்
மேலைவழிகாட்டிவிடுவாய் நந்தீஸ்வரனே (௨௰)
கண்டப்பாலங்கடத்தி கமலாசனத்தேற்றி
அண்டப்பாலுங்கொடுத்தே யருள்வாய்நந்தீஸ்வரனே (௨௰௧)
செங்கமலபீடச் செல்வியர்தாளிணைக்கத்தலைவைத்தாற்
றங்கமலைகூடத் திருவாய்நந்தீஸ்வரனே (௨௰௨)
போதகத்தைப்பூட்டிப் புருவமைந்தாயுமெற்றும்
வாதவித்தைதகாட்ட வருவாய்நந்தீஸ்வரனே (௨௰௩)
ரசயோகசித்து னயனருளினுலாடிமை
நிசயோகமுற்று நிலைப்பேனந்தீஸ்வரனே (௨௰௪)
மகாவித்தைசாய்ப்பதற்கு மறியசீர்தழுற லுண்டே
ஸகிபுத்துதின்பதற்கு லபிப்பாய்நந்தீஸ்வரனே (௨௰௫)
குப்பைவழிவியனும் கோஷ்டியெல்லாந்தக்கவைத்துக்
கற்பவலைவரம் காட்டுநந்தீஸ்வரனே (௨௰௬)

கற்பவழிலவாக் காட்டுதற்பூண்ட தம்பின்
பற்பவழிமுறை பகர்வாய்நந்தீஸ்வரனே (௨௭)
சூதமுகவீற்றிச் சொன்னமதியயிர்தப்பிர
சாதமதிலூற்றித் தருவாய்நந்தீஸ்வரனே (௨௮)
அற்பமேதகமதா யடியேனெடுத்தவுடல்
கற்பமேதகமதாய்க் கணிப்பாய்நந்தீஸ்வரனே (௨௯)
உமைநம்பினோர்வாழ்வே யோங்குணங்குடியாரிக்
கெமனும்பிணையாருமெதிரோ நந்தீஸ்வரனே (௩௰)
முநீஸ்வரரிலொன்றாய் முடித்தருள்வாயாகிலெனைச்
சநீஸ்வரர்கூடச் சா[illegible]டமாய்நந்தீஸ்வரனே (௩௧)
காலனும்பேயாய்விடுவான் காலங்கடந்துசிறு
பாலனும்போய்விடுவேன் பரமேநந்தீஸ்வரனே (௩௨)
கவனமணிமுதலாய்க் கட்டியென்கைக்களிக்க
மௌனமணிந்தாய்க்கு வகுப்பாய்நந்தீஸ்வரனே (௩௩)
மாயைவலைவீசி மயக்கமன்மா[illegible]திகன்மேல்
மநயவலைவீசநிகழ்த்துநந்தீஸ்வரனே (௩௪)
தோகயிளமின்னார்கள்போகமும்பசியும்
போகவழிசொன்னாற் போதும்நந்தீஸ்வரனே (௩௫)
பெண்ணுயுலகமெல்லாம் பிணக்காடாக்கிவையோ
மண்ணுய்மடிவதென்ன மாயம்நந்தீஸ்வரனே (௩௬)
சையோகப்பித்தைவெல்ல சமர்த்தோடுகச்சைகட்டு
மெய்யோகப்புத்திசொல்ல வேண்டும்நந்தீஸ்வரனே (௩௭)
பாஷாண்டிகடோறும் பலவொன்றுமின்றிவேறும்
வேஷாண்டியாக்கி விடுகாண்நந்தீஸ்வரனே (௩௮)
பிணம்பிடுங்கித்தின்னும் பேய்போற்சிலநாயர்
பணம்பிடுங்கித்தின்பதென்ன பாவம்நந்தீஸ்வரனே (௩௯)
பணமுடியானென்றும் பலம்பிடி[illegible]றுமெனைக்
குணங்குடியானென்றுங் குறிப்பாய்நந்தீஸ்வரனே (௪௰)
உன்னையன்றியேழை வேறொருவ[illegible]ம்
அன்னையென்றுமாள வருள்வாய்நந்தீஸ்வரனே (௪௧)
ஆத்தாளைத்தேடியலைந்தலைந்தாடியிற்பிறக்குங்
காற்றுடியானேன் கண்ணே நந்தீஸ்வரனே (௪௨)
மான்புரித்தகன்றாய் மயங்குதற்கென்றாய்வயிற்றி
லேன்பிறந்தகன்றே யிருந்தேனந்தீஸ்வரனே [illegible]
எதேதுவெனையின்று வென்றுபின்வாறுசெயத்
தாறேனுவினும்மெய்செயத் தவேறுநந்தீஸ்வரனே (௪௪)

தாய்தாயேயென்றே தலைப்பறட்டக்கொண்டுவெறு
வாய்வாயையென்றோ மடிவேனந்தீஸ்வரனே (௬௫)
தாயைவிட்டுப்பிள்ளை தவிப்பதறிந்தவுடன்
சேயையிஷ்டம்வைத்தலைக்கச் செய்யும்நந்தீஸ்வரனே (௬௬)
சன்றதனுக்கேயிரங்குங் காலியெனவென்மனைத்தாய்
என்றன்றனக்கிரங்க விசைப்பாய்நந்தீஸ்வரனே (௬௭)
மாயைமணமுடித்து மயக்கமெதனையீன்ற
தாயைமணமுடித்துத் தருவாய்நந்தீஸ்வரனே (௬௮)
தற்பரத்தினல்வெளியே சர்வபரிபூரணமே
சிற்பரத்தினொளியே சிவமேநந்தீஸ்வரனே (௬௯)
முத்தரெல்லாம்வாழியெங்கண் மோனமணித்தாயருளுஞ்
சித்தரெல்லாம்வாழிசுத்த சிவமேநந்தீஸ்வரனே (௭௰)
குற்றம்பலநீக்கிக் குணங்குடியென்றிருமேவுஞ்
சிற்றம்பலம்வாழி சிவமேநந்தீஸ்வரனே (௭௧)

நந்தீஸ்வரக்கண்ணி-முற்றிற்று

தனி.

கட்டளைக்கலித்துறை.

மடக்கிமடக்கிவருமாயினுஞ்சொல்லு மாண்பொருளும்
அடக்கிஅடக்கிக்கிடக்குங்கண்டீர்பலருய்ந்திடுவொள்வார்
நடக்கினுமாமன வுண்மையிலுள்ளிநடையொழிந்து
கிடக்கினுமரமென் றறிநாநாடிக்கிளர்த்தியதே

ஆகப்பாடல்-௭௧

சுபமில்லாகித்தருமானிற்றகிம்,

மஸ்தான்சாகிபு அவர்கள்பாடிய
ராகங்கள்

௧-தரு-இராகம்-புன்னாகவராளி-அடதாளசாப்பு

பல்லவி.

பரமுத்தன்குணங்குடிதெருவில்வரும்பவனி
பார்த்துவருவம்வாருங்கள்

அநுபல்லவி

பரமுத்தர்சர்கணத் தரமுற்றவர்களிரு
பரமொய்த்தினியருறி தாமுத்தியருளுஞ்சம் பரமுத்தன்)

சரணங்கள்.

௧. சாத்திரவேதந்த-சலாம்-சலாம்   சலாமென்ன
ஜகமீஜாதியின்னல்-பனீர்-பனீர்   பனீரென்ன
பேர்த்துளம்போற்றும்-றகீம்-றகீம்   றகீமென்ன
பிசகில்லாதிற்றரு   மாணிக்கமீம்மென்றுன்
அசையாமலொருநிலை   விசுவாசமருளும்நம்(பாமுத்தன்)

௨. கருமமத்தாளந்-திடல்-திடல்   திடலென்ன
கைமணியோசை-கனீல்-கனீல்   கனீலென்ன
திருவருளாட்டந்-திடும்-திடும்   திடுமென்ன
தினந்தந்தோந்தினத்தந்தோம்   மனத்தோந்தோம்
மனத்தொந்தோம்
உனத்தாளனைத்தையு   நினைத்தபடியாநம்(பாமுத்தன்)

௩. நாகச்சரீரம்-நமோல்-நமோல்   நமோலென்ன
நஞ்சுவினைகள்-சமோல்-சமோல்   சமோலென்ன
விசுமருட்கள்-விதீல்விறில்   விதீலென்ன
வேதவாளெடுத்தேந்தி   சோதிவாசியிலேவி
ஆதிபிசுவிலுட   ஞேதிக்கவியாவைநம்(பாமுத்தன்)

௪. நாடாதபேர்கள்-பயம்-பயம்   பயமென்ன
நம்பியபேர்கள்-ஜயம்-ஜயம்   ஜயமென்ன
தேடியபேர்கள்-நயம்-நயம்   நயமென்ன
திக்குத்திசைகளெங்கு   மிக்கவொளிபரப்பி
ஒக்கவுலகமொரு   கைக்குள்ளடங்கும்நம்(பாமுத்தன்)

௨. தரு-இராகம்-சௌராஷ்டிரம்-சாப்பு தாளம்

பல்லவி.

இல்லல்லாகூவென்றெனின்னமறந்துகொண்டிருப்பாயென் னெஞ் (சமே

அநுபல்லவி.

அல்லாகூவென்றவகண்டுதகண்டமா நல்லாயிருக்குதகாலும்ஒரு
சொல்லாலேஇப்படித்தோணும்-எருகு-உல்லாசமாலாயில்லாத இல்லை)

சரணங்கள்

௧. அண்டம்புவனங்களென்றுமிருப்பதை
யாதென்றறியத்தா
நின்றுநிறைந்தமறைத்துசிறுத்த
நெடியநிராமயத்   தானே-முதல்
பண்டெபழகியநாட்டத்துக்கேபதா
பாணைக்கூத்தாளர்து   தானே-நீ
கண்டுகளித்துச்சகலமும்விட்டுக்
களைபேயிறுப்தலத்   தானே-நான்

சென்றவிடத்திற்செயற் றானே - தன்னைக்
கண்டுகொண்டிலாயிலாம (இல்லல்லா)

௨- கெட்டமனத்தை யுடையபொருளைக்
கொடாவினைப்போலவு முண்டோ - காசைக்
கட்டிப்புதைத்துக் கடைசியிற்சாகின்ற
கழுதைகட்கும்பல னுண்டோ - கத்தக்
கட்டிப்பயல்கள் மனத்தைக்களைக்க
மருந்துகள்மாத்திரை யுண்டோ - வெகு
சட்டமதாகிய நிஷ்டையிராத
சண்டாளர்க்குச்சாஸ்திர முண்டோ இத்தத்
துஷ்டனைப்போலவு முண்டோ - நீ
கெட்டியுடன்வாயிலாக (இல்லல்லா)

௩- இல்லல்லாகூவென்றே தானிராமல்
திண்டாடவுமிருந் தேனே மெத்த
நல்லோர்தான்புடன் ஒழுக்கையும்விட்டு
நலங்களையுமறந் தேனே - தன்னை
வெல்லுங்குருபரன் சொல்லியதீக்ஷை
வினவாமல்விட்டிருந் தேனே - அதை
அல்லும்பகலு மறியாமலென் னுள்ளே
ஆபாசமாக்குவித் தேனே - இது
எல்லாமதிந்திருந் தானே சொல்லுஞ்
சொல்லுஞ்சொல்லும்லாக (இல்லல்லா)

௪- பூசைகள்செய்கிறே னென்றுதிரிந்து
புலம்பியபாபமும் போக்கி - பெண்கள்
ஆசையிலுமேல்மனைகந்தாங்கள்
அடிபட்டதும்லகு வாக்கி - எங்கள்
ஈசன்றிருவடி யாசையுள்ளானையின்
என்னைக்கையாலவர் தூக்கி - அந்தத்
தோஷித்தனங்க டொலையத்தொழுகத்
துறைகளைப்போதனை யாக்கி - கெட்ட
பாசங்களைவிட்டு நீக்கி - கந்த
வாசியுடன்லாயிலாக (இல்லல்லா)

௫- என்சாணுயாத் திருக்கும்பனங்க
கிறக்கியுண்டேனென்மனக் கண்டேனே - கெட்ட
கஞ்சாவுங்கள்ளு மாக்குமபினுங்
கலப்பதைவிடுவென்று மண்டேனே - நீ
தஞ்சாவூராளு மகாராஜன்பாதந்
தனித்துநமஸ்காரம் பண்ணேனே - என்றன்

கொஞ்சப்பெலனுள்ளகாயாபுரியென்ற
 கோட்டையிடிந்திடு மென்மேனே-அவர்
அஞ்சாதிடிப்பரென் றென்மேனே-இனிக்
 கொஞ்சிக்கொஞ்சிலாயிலாக (இல்லல்லா)
௬. என்னவிதமென்றுசொல்வேன் மூடிக்க
 மூடிக்குவைதென்னுக்குள் வாலே-ஒரு
அன்னையிருந்தே பழகுயிருக்க
 அசைந்தசைந்தாடுவ தாலே-அதன்
மூன்றுமேலயான்செய்த பாக்கியங்கண்டு
 மூன்றுசையில்லாத தாலே-அது
தின்றுமேலயானந்தவெள்ளம்பெருகித்
 தடையறப்பாயுத லாலே-பயிர்
அன்னபிடிப்பத லேலே-உனக்
 கென்னகுறைநலாயிலாக (இல்லல்லா)
௭. வாசனையாகிய மாசத்தவஸ்துவும்
 வாக்குமனத்துக் கெட்டாதே-அதில்
ஆசைக்கடல்பொங்கி யோசையுடனலே
 ஆடிடுமொன்றுங் காட்டாதே-இந்த
நாசச்சரீரத்தை வாசியிற்றீர்த்திடில்
 நாசத்தைபண்ட வொட்டாதே-நல்ல
யோசனைசெய்யுங் குணங்குடிவந்திடில்
 யோகமுனக்குக் குன்றாதே-ஒரு
மாசறயாகவென் றோதே-காசில்
 ஆசைவிட்டேலாயிலாக (இல்லல்லா)

௩-தரு-இ-ம்-பந்துவராளி-சாப்புதாளம்.

பல்லவி.

பெண்கொண்டபேர்பட்டபாட்டையுங்கேட்டையா
 பேசுவேனமைநெஞ்சமே

அநுபல்லவி,

சந்தையும்போக்கிச் சதிமானமாகச்
 சகசண்டியாக்குவித் திடுவாள்-வெகு
பங்கப்படுத்திவிட் டிடுவாள்-அந்த
 மங்கையராசைவைத்ததையோவையத்தில் (பெண்கொ)

சரணங்கள்,

௧, தங்கைநகையுமுகப்பணிச்சேலையுந்
 தாவெனவேகுதாய் காட்டுவாள்-என்றன்
செங்கைவளையுந் தலைக்கெண்ணெய்ச்சீப்புந்

சிறப்பொடுதாவென மாட்டுவாள்-என்னைக்
கொங்கைக்கிசைந்தரவிக்கையுங்கோலப்
பணியுங்கொடுவென பூட்டுவாள்-அட
வெங்கட்பயனீவெறுமக்களேறுவென்று
வீட்டில்வாராதேயென் றோட்டுவாள்-வெகு
பங்கப்படுத்தினி றுட்டுவாள்-அந்த
மங்கையாசைவைத்தனையேயோவையத்தில் (பெண்கொ)

௨- ஆலையைத்தேடியருள்பெறநாடில்
அழுதழுதுமடி பிடிப்பாள்-நீதான்
ஏதென்னைவிட்டுப்பிரிவதுமென்றவள்
ஏங்கியேங்கித்துடி துடிப்பாள்-இன்னும்
வாரா நீசெய்புத்தவம்பலியாதெனை
வாழ்த்திலசைகொடை கொடுப்பாள்-கெட்ட
